முருகப்பெருமான் துணை

**மகான் நந்தனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.05.2022**, வெள்ளிக்கிழமை

1. அவனி காக்க அவதாரம் புரிந்த
அண்ணலே ஆறுமுக அரங்கனே
அவதார உன் பெருமை கூறி நந்தனாரும்
அறிவிப்பேன் சுபகிருது தகர் திங்கள்
2. திங்களிலே மூவேழீர் திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 23 ம் நாள், 06.05.2022 வெள்ளிக்கிழமை)
தேசிகனுக்கு அருளாசி தன்னை
ஓங்காரன் பலம் பெருக உரைப்பேன்
ஓங்காரக்குடிலின் பெருமை தன்னை
3. தன்னையே உலகோர் அறிந்து
தவசி அரங்கன் திருவடிபற்றி
நன்னயமாய் ஞானவழித்தொடர
ஞான வாழ்வாக ஆற்றல் கூடி
4. கூடியே சகல பாதுகாப்பும்
குருமார்க்கம் தொடரக் கிட்டும்
நாடிடும் எண்ணம் செயல் வெற்றி
நமனையே வெல்லும் சித்தி கூடி
5. கூடியே ஞானவான்களாக சிறப்பர்
குறைவின்றி தேசம் காக்கும்
ஈடிணையிலா சக்திகளாகி
ஏழாம்படிடவீடு ஆறுமுகன் ஆசிபட
6. ஆசிபட உயருவர் தேறுவர்
அறிவிப்பேன் மாற்றம் தரும்
வாசி வசம் சகல சூட்சுமமும்
வலியக்கிட்டி குருவருள் தன்னால்
7. தன்னிலே தேறுவர் மாறுவர்
தனவளம் சகலபலமுடனும்
எண்ணம் தூய்மைபட இனிதே
எல்லா வரமும் அடைவர்
8. அடையவே அரங்கன் காட்டும்
அற்புத சன்மார்க்க நெறியை
தடையற ஏற்று வணங்கிவர
தவபலம் அடைந்தும் உயர்வர்
9. உயர்வான ஞான சமூகத்தை
உலக மாற்றமாகச் செய்யும்
தயவான ஞானப்படைகளாக
தரணியெங்கிலும் பெருகி இனிதே

10. இனிதே அரங்கன் வந்த
இணையிலா அவதார நோக்கம்
கனிந்து கலியுகம் தானும்
கந்தவேலன் தலைமை கொண்ட

11. கொண்ட ஞானயுகமாக மாறி
குவலயம் அமைதி பாதுகாப்புறும்
தொண்டுவழி சடுதி மாற்றம் பெறும்
தெரிவித்த அருளாசி முற்றே

–சுபம்–